(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE SANDALWOOD COURT TIRUPATTUR

# C.C.1/2018

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW3 Page.No.26/2016

| | | | |
|---|---|---|---|
| Name : | ஏழுமலை | Caste : | இந்து |
| Father's Name: | கோவிந்தசாமி | Calling: | வனக்காப்பாளர் |
| Village: | புதூர் | | இந்து |
| Taluk: | திருப்பத்தூர் | Age | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated :09.11.2020.

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது அங்கு 10 முதல் 15 நபர்கள் இருந்தனர். அங்கு 2 சந்தனமரத்துண்டுகளை கைப்பற்றினோம். சம்பவயிடத்திற்கு செல்லும்போது அதிகாலை 4.30 மணி இருக்கும். அங்கு நிலத்தின் உரிமையாளார் சந்தரா, மூர்த்தி என்று 2 நபர்கள் இருந்தனர். சம்பவயிடத்தில் நான் நீளம் மையச்சுற்றளவு அளந்தேன். நான் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொழுத்து செய்தேன். நான் வழக்கு தடய சொத்துக்களை குறித்து விட்டு என்னுடைய கணியம்பாடி பீட்டிற்கு சென்று விட்டேன். குமார் வனச்சரகர் சம்பவயிடத்தில் தணிக்கையில் எங்களுடன் இருந்தார். சம்பவயிடத்திலேயே வைத்து வனச்சரகர் குமார் முன்னிலையில் வனவர் எச் நமுனா, வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை தயார் செய்தார். வனச்சரகர் எந்த ஆவணத்தில் கையொழுத்திட்டார் என்று கேட்டால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். வழக்கில் கூறியவாறு சம்பவம் நடக்கவில்லை என்று எதிரிகளின் மீது பொய் வழக்கு பதிந்துள்ளீர்கள் என்றும் கூறினால் சரி இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE SANDALWOOD COURT TIRUPATTUR

**C.C.1/2018**

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW2 Page.No.26/2016

| | | | |
|---|---|---|---|
| Name : | கேசவண் | Caste : | இந்து |
| Father's Name: | அப்பாகுட்டி | Calling: | வனவர் |
| Village: | இடையஞ்சாத்து | | இந்து |
| Taluk: | வேலூர் | Age | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated :09.11.2020.

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

சம்பவம் பற்றிய தகவல் வனச்சரகர் சி.குமார் அவர்களுக்கு வந்தது. நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது 4.30 முதல் 5.00 மணி இருக்கும். நாங்கள் சம்பவயிடத்திற்கு இருச்சக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவயிடத்தில் பொதுமக்கள் இருந்தனர். பொதுமக்களை வனச்சரகர் விசாரித்தார். சம்பவயிடம் சந்தராவிற்கு சொந்தமானது. நான் சந்தரா மற்றும் மூர்த்தியை பார்த்தேன். சம்பவயிடத்தின் உரிமையாளரான சந்தராவிற்கு தோராயமாக 40 வயதும் கணவர் மூர்த்திக்கு 45 வயதும் இருக்கும். சம்பவயிடத்தில் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நில உரிமையாளரிடம் கையொப்பம் வாங்கவில்லை. எதிரி உரிமையாளரின் வீட்டின் அருகில் இருந்தார். நான் பார்க்கும் போது எதிரி சந்தராவின் வீட்டின் முன் வாசலில் இருந்தார். சந்தனமரம் சந்தராவின் வீட்டிலிருந்து தோராயமாக 20 மீட்டர் தொலைவில் இருந்தது. எதிரியை வீட்டின் உரிமையாளர் பிடித்து வைத்திருந்தனர். நாங்கள் யாரும் எதிரியை பிடிக்கவில்லை. அங்கு எத்தனை சந்தனமரங்கள் இருந்தது என்றால் 1 சந்தனமரம் இருந்தது. எனது முதல் விசாரணையில் சம்பவயிடத்தில் 2 சந்தனமரங்கள் அடுக்கி வைத்திருந்தார்கள் என்று கூறியிருந்தால் அது தவறு. மரங்களை

எதனால் வெட்டினார்கள் என்று கேட்டால் சாட்சி கைரம்பத்தினை வைத்து வெட்டினார் என்றார். வனச்சரக அலுவலர் கைரம்பத்தினை கைப்பற்றினார். அலுவலகத்திற்கு வந்தபின் எதிரியை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் சாட்சி வாங்கியதாக கூறுகிறார். நான் அலுவலகத்தில் வைத்து எச் நமுனா மற்றும் உத்தேசவரைபடம் தயார் செய்தேன். மொத்தம் 2 கட்டைகள் இருந்தாக எச் நமுனாவில் பதிவு செய்தோம். வனச்சரகர் கைப்பற்றியதாக சொன்ன கைரம்பத்தினை எச் நமுனாவில் பதிவு செய்துள்ளீர்களா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்கிறார். நாங்கள் 4 பேர் தணிக்கைக்கு சென்றோம். மற்ற வன ஊழியர்களின் உதவியுடன் தடய சொத்துக்களையும் எதிரியையும் அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். நாங்கள் எதிரிகளை அலுவலகத்திற்கு கொண்டு வரும்போது காலை சுமார் 11 மணி இருக்கும். நான் மதியம் 1 அல்லது 2 மணிக்கு எச் படிவம் மற்றும் உத்தேச வரைபடம் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். மேல் கூறியவாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை எதிரிகளின் மீது பொய் வழக்கு போட்டுள்ளீர்கள் என்று கூறினால் அது சரி இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE SANDALWOOD COURT TIRUPATTUR

**C.C.1/2018**

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.PW1 Page.No.26/2016

| | | | |
|---|---|---|---|
| Name : | கண்ணன் | Caste : | இந்து |
| Father's Name: | கெங்காதரன் | Calling: | வனவர் |
| Village: | கணியம்பாடி | | இந்து |
| Taluk: | வேலூர் | Age | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Indian Evidence Act 1872 Dated :09.11.2020.

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

வனச்சரக அலுவலகத்திலிருந்து சம்பவ இடம் சுமார் 7 கி.மீ. ஆகும். சம்பவயிடம் பாதுகாக்கப்பட்ட காப்புகாடு இல்லை. சந்தராவுக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருந்தது என்று எனக்கு தெரியாது. சந்தராவின் இடத்தில் ஒரு சந்தனமரம் இருந்தது. அந்த சந்தனமரத்திற்கு எண் எதுவும் கொடுக்கப்படவில்லை. தகவல் எனக்கு வந்தது. பட்டா நிலத்தின் உரிமையாளர் சந்தராவை நாங்கள் விசாரித்தோம். சந்தராவை விசாரித்ததில் எந்த அறிக்கையும் இங்கு சமர்பிக்கவில்லை. சம்பவயிடம் பட்டா நிலம் என்பதற்கான ஆதாரம் எதுவும் நாங்கள் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை. சம்பவயிடத்திற்கு செல்லும்போது அதிகாலை 4.30 மணி இருக்கும். சம்பவயிடத்தில் ஒரு எதிரி மட்டுமே இருந்தார். நான் வழக்கின் அரசு தரப்பு மகஜர், எதிரியின் வாக்குமூலம் மற்றும் சொத்துவிரவப்பட்டியல் தயார் செய்தேன். நாங்கள் பார்த்தபோது எதிரி மரத்தின் அடிப்பகுதியை வெட்டி சேகாரம் செய்து விட்டு அமர்ந்திருந்தார். மொத்தம் 3 துண்டு கட்டைகளை கைப்பற்றினோம். சந்தனமரத்தின் மற்ற பகுதிகளை அங்கேயே விட்டுவிட்டு வந்தோம். வெட்டப்பட்ட சந்தனமரம் தோராயமாக 12 அடி உயரம் இருக்கும். எச் நமுனா சம்பவயிடத்திலேயே வைத்து தயார் செய்தோம். மொத்தம் 19 கி.கி. தடய சொத்துக்களை

கைப்பற்றினோம். சம்பவயிடத்திலேயே வைத்து கட்டைகளை எடை பார்த்தோம். நான் தயார் செய்த அரசு தரப்பு மகஜரில் 3 சந்தனமரத்துண்டுகளின் எடை குறிப்பிடப்பட்டுள்ளது. மகஜரில் எங்கள் குழுவினரிடம் சாட்சி வாங்கினோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குழுவில் மற்ற அலுவலர்கள் சாட்சி கையொழுத்திட்டனர். சம்பவயிடத்திற்கு நாங்கள் சொந்த வாகனத்தில் வந்தோம். நாங்கள் சொந்த வாகனத்தில் வந்ததாக ரிமண்டு ரிப்போட்டில் குறிப்பிடவில்லை. சம்பவயிடத்தின் தோராய வரைபடம் ஸ்தலத்தில் தயாரிக்கப்பட்டது. அலுவலகத்திற்கு காலை 7 மணிக்கு வந்தடைந்தோம். அலுவலகத்திற்கு வந்தபிறகு தான் குற்ற எண் தெரியும். காலை 4.30 மணிக்கு பட்டா இடத்தின் உரிமையாளர் சந்தரா என்பது தெரியும். படிவம் 95 யை சாட்சியிடம் காட்டி கேட்டபோது அதில் மரத்தின் கிளை ஒன்று மட்டும் வெட்டியதாக இருப்பதை ஒப்புக்கொள்கிறார். இந்த வழக்கில் தனி நபர் யாரையும் நாங்கள் விசாரிக்கவில்லை. வழக்கின் எச் நமுனா முதல் பிரதியை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் கூறினால் சரி. சம்பவம் நடந்ததாக பொய்யான வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கூறினால் சரி இல்லை.